## இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றம்

---

# 1993 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, பிரசாவுரிமை (திருத்தச்) சட்டம்

---

*[1993, செத்தெம்பர் மாதம் 22 ஆந் தேதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது]*

***அரசினர் ஆணைப்படி அச்சிடப்பட்டது.***

---

*1993, செத்தெம்பர் மாதம் 24 ஆந் தேதிய இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகையின் II ஆம் பகுதிக்குக் குறைநிரப்பியாக வெளியிடப்பட்டது.*

***இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.***

---

**கொழும்பு 7, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்.**

***விலை : சதம் 45*** ***தபாற் செலவு : ரூபா 1.00***

## 1993 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, பிரசாவுரிமை (திருத்தச்) சட்டம்.

[1993, செப்தெம்பர் மாதம் 22 ஆம் திகதி அத்தாட்சிப்படுத்தப்பட்டது.]

ச. வ—ஓ 57/91

பிரசாவுரிமைச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்.

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:—

1. இச்சட்டம், 1993 ஆம் ஆண்டின் 43 ஆம் இலக்க, பிரசாவுரிமை (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம். *சுருக்கப் பெயர்.*

2. (இதனகத்துப்பின்னர் "முதன்மைச் சட்டவாக்கம்" எனக் குறிப்பீடுசெய்யப்படும்) பிரசாவுரிமைச் சட்டத்தின் 13 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு, இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், அது அச்சட்டத்தின் 13அ என்னும் பிரிவு என்றவாறு பயனுறுதலும் வேண்டும் :— *359ஆம் அத்தியாயத்தில் 13அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்.*

*"வதிவிலிருக்கும் விருந்தினர் திட்டமொன்றில் பதிவுசெய்யப்பட்டுள்ளவர்களான ஆட்களை பிரசைகள் என்றவாறு பதிவு செய்தல்.*

13அ. (1) குடிவரவு குடியகல்வுச் சட்டத்தின் IIIஆம் பாகத்தின் கீழ் ஐந்தாண்டுகாலப் பகுதியொன்றுக்குச் செல்லுபடியாகும் வீசா அல்லது புறக்குறிப்பு வழங்கப்பட்டு, அரசாங்கத்தினால் வெளிநாட்டு முதலீட்டாளர்களுக்கும் உயர் தொழிலர்களுக்குமென அங்கீகரிக்கப்பட்டதான வதிவிலிருக்கும் விருந்தினர் திட்டமொன்றில் பதிவு செய்யப்பட்டிருப்பவருமான ஆளொருவர், விதித்துரைக்கப்பட்ட படிவத்தில் அமைச்சருக்கு அவர் விண்ணப்பம் செய்வதன் மேல்—

(அ) (i) இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குக் கணிசமானளவில் அவர் பங்காற்றியுள்ளாரென, அல்லது

(ii) அறிவியல், கல்வி, மருத்துவம், புதைபொருள், இசை, இலக்கியம், கமத்தொழில் அல்லது பொழுதுபோக்குத்துறைகளில் நாட்டின் சமூக பண்பாட்டு வாழ்வுக்கு அவர் குறிப்பிடத்தக்க பங்காற்றியுள்ளாரென, அத்துடன்

(ஆ) அவர் இலங்கையில் விதித்துரைக்கப்பட்ட காலப் பகுதிக்கு வதிவில் இருந்துள்ளாரென; அத்துடன் இலங்கையில் சாதாரணமாக வதிவில் உள்ளாரென அல்லது இலங்கையில் சாதாரணமாகத் தொடர்ந்து வதிவிலிருப்பதற்கு எண்ணியுள்ளாரென,

அமைச்சர் திருப்தியடைவாரெனின், அவ்வாள் இலங்கையின் பிரசை என்றவாறு பதிவு செய்யப்படலாம்;

(2) இப்பிரிவின்கீழ் இலங்கைப் பிரசைகள் என்றவாறு பதிவு செய்யப்படும் ஆட்களின் எண்ணிக்கை ஏதேனும் ஆண்டில் இருநூறு பேர்களையும் கூட்டு மொத்தத்தில் ஓராயிரம் பேர்களையும் விஞ்சுதலாகாது.

(3) அரசாங்கத்தினால் அங்கிகரிக்கப்பட்ட வதிவிலிருக்கும் விருந்தினர் திட்டமொன்றின்கீழ் ஆளொருவர் பதிவு செய்யப்பட்டுள்ளார் என்ற நிகழ்வு ஆனது, இப்பிரிவின்கீழ் இலங்கைப் பிரசை என்றவாறு பதிவு செய்யப்பட வேண்டுமென்ற உரிமையை அத்தகைய ஆளின்மீது சுமத்துகிறது என்றவாறு கருதப்படுதலாகாது.".

முதன்மைச் சட்டவாக்கத்தின் 17 ஆம் பிரிவைத் திருத்துதல்.

3. முதன்மைச் சட்டவாக்கத்தின் 17ஆம் பிரிவு, அப்பிரிவிலுள்ள "13ஆம் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் இலக்கத்தையும் நீக்கிவிட்டு, அவற்றுக்குப் பதிலாக "13 ஆம் பிரிவின்கீழ் அல்லது 13அ என்னும் பிரிவின்கீழ்" என்னும் சொற்களையும் இலக்கங்களையும் இடுவதன் மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.

4. இச்சட்டத்தின் சிங்கள உரைக்கும் தமிழ் உரைக்கும் இடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.